DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தீபா |
| Father / Husband Name | வினோத் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.04.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சங்கராபுரம் கிராமத்தில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வினோத் என் கணவர் ஆவார். 17.04.2025 ம் தேதி மாலை 4.00 மணிக்கு சென்னையில் இருந்து எனது கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வரும்போது மதுராந்தகம் கருங்குழி பெட்ரோல் பங்க் அருகே வரும்போது எனது கணவருக்கு முன்னால் சென்ற டேங்கர் லாரி எவ்வித சைகையும் காட்டாமல் இடது பக்கமாக திரும்பும்போது எனது கணவர் டேங்கர் லாரியில் மோதி விபத்து ஏற்பட்டு சம்பவயிடத்தில் இருந்துவிட்டதாக காவல் நிலையத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னார்கள், நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் தகவல் சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். விபத்து பற்றி கேள்விப்பட்டு 18 ம் தேதி காலையில் நான் பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 ஆகியோர்களுடன் நேரடியாக காவல் நிலையம் வந்தோம் என்றால் சரிதான். அங்கு வைத்துதான் போலிசார் என்னையும், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 ஆகியோர்களையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.